

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஜம்போதி ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் காய்கறி விதை தொகுப்புகள், பழச் செடிகளை வழங்கினார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி உள்ளனர்.

### கடலூர் மாவட்டம் - செம்மங்குப்பத்தில் நிகழ்ந்த இரயில் விபத்தில்

# உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு !

**சென்னை, ஜூலை 9-**

**கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நிகழ்ந்த இரயில் விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததுடன் நிதியுதவியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நேற்று (8.7.2025) காலை நடந்த மோசமான இரயில் விபத்தில் விலைமதிப்பில்லாத இரண்டு இளம் பிள்ளைகளின் உயிர் பறிபோன செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். வாழ வேண்டிய வயதில் உயிரிழந்த அந்தத் துளிர்களின் மரணம் என்னை ஆற்றொணாத் துயரில் ஆழ்த்துகிறது.

விபத்தில் உயிரிழந்த செல்வன் நிமிலேஷ் (வயது 12), த/பெ விஜயசந்திரகுமார்) மற்றும் செல்வி சாருமதி (வயது 16), த/பெ. திராவிடமணி) ஆகிய இருவரின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நான்கு நபர்களுக்கும் சிறப்பான சிகிச்சை அளித்திடவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சேலம் கோட்டம் சார்பில்

# மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து வழித்தடங்கள்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜூலை 9-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் புதிய வழித்தடம், வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் புதிய வழித்தடம், வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இன்றைய தினம் மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் வழியாக ஜங்சன் வரையில் 6 புதிய நகரப் பேருந்துகளும் மற்றும் எடப்பாடியில் இருந்து கொமராபாளையம் வரையிலும், ஓமலூரில் இருந்து கீரைக்காரனூர் வரையிலும், மேட்டூரிலிருந்து கொளத்தூர், கோவிந்தபாடி வழியாக காரைக்காடு வரையிலும், ஆத்தூரிலிருந்து தலைவாசல் வழியாக ஊனத்தூர் வரையிலும், மேட்டூரிலிருந்து நங்கவள்ளி வழியாக தாரமங்கலம் வரையிலும் என மொத்தம் 11 புதிய பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து பாப்பம்பாடிக்கு சித்தர் கோவில், நல்லணம்பட்டி, இளம்பிள்ளை வழியாக இயக்கப்பட்ட பேருந்து தற்போது சித்தர்கோவில், காடையாம்பட்டி, இளம்பிள்ளை வழியாக பாப்பம் பாடிக்கும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து ஜங்சன் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்போது வேப்பிலைப்பட்டி வரையிலும் என 2 வழித்தட மாற்றம் செய்யப்பட்ட பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, மேச்சேரியிலிருந்து கீரைக்காரனூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது ஓமலூரிலிருந்து கீரைக்காரனூர் வரையிலும், நல்லமாத்திலிருந்து ஆத்தூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது நல்லமாத்திலிருந்து கடம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி வழியாக ஆத்தூர் வரையிலும், வீ.களத்தூரிலிருந்து ஆத்தூர் வரையில் இயக்கப்பட்ட 2 பேருந்துகள் தற்பொழுது வீ.களத்தூரிலிருந்து வெள்ளையூர் வழியாக ஆத்தூர் வரையிலும், ஆத்தூரிலிருந்து நல்லமாத்தி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது ஆத்தூரிலிருந்து கடம்பூர் அரசு உயர்நிலைப்பள்ளி வழியாக நல்லமாத்தி வரையிலும்,

ஆத்தூரிலிருந்து பிள்ளையார்பாளையம் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது ஆத்தூரிலிருந்து கடம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி வழியாக பிள்ளையார்பாளையம் வரையிலும், கைகளத்தூரிலிருந்து தலைவாசல் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது கைகளத்தூரிலிருந்து வெள்ளையூர் வழியாக தலைவாசல் வரையிலும், வாழப்பாடியிலிருந்து பேளூருக்கு இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது பேளூரிலிருந்து ரங்கனூர் வரையிலும், குறிச்சியிலிருந்து பேளூருக்கு இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது பேளூரிலிருந்து ரங்கனூர் வரையிலும், எடப்பாடியிலிருந்து ஆணைப்பள்ளம் வரையில் இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது ஆணைப்பள்ளத்திலிருந்து கல்லூரல்காடு வரையிலும்,

மேட்டூரிலிருந்து மூலக்காடு வரையில் இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது மேட்டூரிலிருந்து ஆடையூர், மேச்சேரி வழியாக புக்கம்பட்டி வரையிலும், ஜலகண்டாபுரத்திலிருந்து மேச்சேரி வரையில் இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது ஜலகண்டாபுரத்திலிருந்து மாதநாய்க்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி வழியாக மேச்சேரி வரையிலும் என 11 பேருந்து சேவைகள் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் ஜோசப் டயஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### தென்காசி தெற்கு மாவட்டம்

# கடையநல்லூர் மேற்கு - ஆலங்குளம் கிழக்கு - ஆலங்குளம் மேற்கு - ஆலங்குளம் தெற்கு ஒன்றிய கழகங்கள் பிரிப்பு அறிக்கையில் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கடந்த 20.06.2025 அன்ற 'முரசொலி'யில் வெளிவந்த தென்காசி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கடையநல்லூர் மேற்கு, ஆலங்குளம் கிழக்கு, ஆலங்குளம் மேற்கு, ஆலங்குளம் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும், தென்காசி தெற்கு மாவட்டம், கடையநல்லூர் மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த இடைகால், நயினாகரம் ஆகிய 2 ஊராட்சிகள் கடையநல்லூர் கிழக்கு ஒன்றியத்தில் செயல்படும்;

தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் மேற்கு ஒன்றியம், ஆலங்குளம் மேற்கு, ஆலங்குளம் மத்திய ஆகிய இரண்டு ஒன்றிய கழகங்களாக பிரிக்கப்பட்டு, வாடியூர், அச்சங்குன்றம், கருவந்தா, கீழ வீராணம், மேல வீராணம், குறிச்சான்பட்டி ஆகிய 6 ஊராட்சிகள் ஆலங்குளம் மத்திய ஒன்றிய கழகமாகவும்;

ஆலங்குளம் மேற்கு ஒன்றியத்தில் கடங்கனேரி, காவலாக்குறிச்சி ஆகிய

2 ஊராட்சிகள் மற்றும் ஆலங்குளம் தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த சிவலார்குளம், மாறாந்தை ஆகிய 2 ஊராட்சிகள், மற்றும் ஆலங்குளம் கிழக்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த, காடுவெட்டி ஆகிய 5 ஊராட்சிகள் ஆலங்குளம் மேற்கு ஒன்றியக் கழகமாக செயல்படும்.

புதியதாக அமையப்பெற்ற ஆலங்குளம் மத்திய ஒன்றிய கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்.

ஆலங்குளம் மத்திய ஒன்றியம் :

பொறுப்பாளர் : **ஷேக்முகமது,** வீராணம், தென்காசி மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 07.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

இதுவரை ரூ.6 கோடியே 27 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

அந்தவகையில்

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 27 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 08–07–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கா.இப்ராஹீம்ஷா, 9வது வார்டு, பாலசமுத்திரம், பழனி, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 2. | கே.ராமமூர்த்தி, பொன்குளம், பனைக்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 3. | எம்.ராமர், கிளைச் செயலாளர், வேப்பங்குளம், திருவேங்கடம், தென்காசி | 25,000/– |
| 4. | எஸ். சண்முகையா, களப்பாகுளம், சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம் | 25,000/– |
| 5. | அ.ஜெயபாண்டி, செல்வநாயகபுரம், போல்பேட்டை பகுதி, தூத்துக்குடி | 25,000/– |
| 6. | செ.மாரியப்பன், குதிரை லாயத் தெரு, கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் | 25,000/– |
| 7. | ஜே.பேபிசிங்,தெற்றிவிளை, அருமனை& அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் | 25,000/– |
| 8. | பெ.சேனாதிபதி, 5வது குறுக்கு தெரு, சக்தி நகர், புதுச்சேரி – 605013. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

# மாதவரம் மாபெரும் பொதுக்கூட்டம்!

மாதவரம், ஜூலை 9-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மணலி புதுநகர் பகுதியில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 16வது வட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நேற்று (8.7.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணிக்கு நடைபெற்றது.

16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் வரவேற்புரை ஆற்றினார்.

15வது வட்டச் செயலாளர் கே.அங்குசாமி, 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் 23வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு, 23 அ வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், பகுதி கழக நிர்வாகிகள் வி.திராவிட வீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, பி.தரணி, க.காசிநாதன், பி.நிர்மல் குமார், கே. செல்வன், நா. மோகன் குமார், நாகூரார், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம், 16வது வட்ட நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், இ. குமரவேல், கே.ராஜ்மோகன், சி. முத்தையா, வி.மாரி, கே.ஏ. ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கட்டிமேடு அ. பக்கீர் முகமது

**ஜூலை 9 (2011)**



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.**

**1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**